[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 ஜூன் 6

கன்னியாகுமரி மாவட்ட கடற்கரையோரங்களை தாக்கிய 'ஒகி' புயல் மற்றும் சமீபத்தில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பால் வள்ளவிளை, மார்த்தாண்டம்துறை மற்றும் நீரோடி கிராமங்களில் மீனவர்களின் வீடுகளும் உடைமைகளும் பலத்த சேதம் அடைந்தன. எனவே, அம்மீனவர்களின் இருப்பிடம் மற்றும் அவர்களின் வாழ்வாதாரங்களை ஆபத்தான அலைகளின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கும் வகையில் மேற்படி மூன்று மீனவ கிராமங்களில் 116 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குறைந்த நீளமுள்ள தூண்டில் வளைவு சுவர்கள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

16. தற்போது தமிழ்நாட்டில் திலேப்பியா மீன் வளர்ப்பானது மிக இலாபம் தரக்கூடிய ஒரு தொழிலாக வளர்ந்து வருகிறது. இதைக் கருத்தில்கொண்டு, திண்டுக்கல் மாவட்டம், பாலாறு-புரந்தலாறு அணையில் திலேப்பியா மீன் தொழில்முனைவோர் பூங்கா 6 கோடியே 97 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்கு தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை குறித்த முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவொற்றியூர் குப்பத்தில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனவுத் திட்டமாக இருந்த சூரை மீன்பிடித் துறைமுகத்தை 200 கோடி ரூபாயில் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக என்னுடைய நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாகவே, ஆழ்கடலிலே சூரை மீன்கள் அதிகமான அளவிற்கு இருக்கும். எனவேதான், நம்முடைய மீனவர்களின் வாழ்வாதாரம் பெருக வேண்டும் என்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, சூரை மீன் பிடிக்கப்பட வேண்டுமென்ற வகையில், 50 சதவீத மானியத்தில், 60 இலட்சம் ரூபாய் படகு என்றால் 30 இலட்சம் ரூபாய் மானியம் தருகிறது. இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இத்தகைய திட்டம் கிடையாது.

2018 ஜூன் 6] [திரு. டி. ஜெயக்குமார்]

நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் தமிழ்நாட்டிலே சூரை மீன் பிடிக்கப்பட வேண்டுமென்ற அந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது, அம்மா அவர்கள் அறிவித்த திட்டத்திற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செயல் வடிவம் கொடுத்திருக்கிறார்கள்.

அதேபோன்று, கடலூர் துறைமுகத்தைப் பொறுத்தளவிற்கு 100 கோடி ரூபாய் அளவிற்கு முதுநகரிலே துறைமுகம் நீட்டிப்பிற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். பொதுவாகவே இந்தத் துறைமுகங்கள் அமைக்கப்படும்போது, மீன்பிடிப்பினால் நல்ல விலை நம்முடைய மீனவர்களுக்குக் கிடைக்கின்ற நிலையும், அதைப்போலவே மீன்பிடி கலன்களில் தங்கி நல்ல தொழில் செய்யக்கூடிய ஒரு வாய்ப்பும் ஏற்பட்டு மீனவர்களின் வாழ்வாதாரமும் பெருகும். அந்த வகையிலே 100 கோடி ரூபாய் கடலூர் மாவட்டத்திற்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல, கன்னியாகுமரி மாவட்டத்தில் பெருமளவு பாதிப்பு என்பது கடலினால் இருக்கும். கடலில் 2 வகை உள்ளது. ஆண் கடல் ஒன்று. பெண் கடல் ஒன்று. கன்னியாகுமரியைப் பொறுத்தளவில் surf beaten coast *என்று சொல்வார்கள். அதாவது அது ஆண் கடல். அந்தக் கடலில் அலைகளின் வேகம் அதிகமாக இருக்கும். 13 கடற்கரை மாவட்டங்களிலே கடல் அரிப்பு காரணமாக மீனவ கிராமங்களுக்கு முழுமையான அளவிற்கு பாதிப்பு ஏற்படுகிறது என்று சொன்னால், அதில் முதல் மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம்தான். எனவேதான், அரசு அதை உணர்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது 116 கோடி ரூபாய் அளவிற்கு, கடல் அரிப்பைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதேபோன்று, நம்முடைய வனத் துறை அமைச்சருடைய திண்டுக்கல் மாவட்டத்தில் GIF Tilapia *மீன் வளர்க்கப்பட வேண்டும். புரதம் என்பது மிகவும் இன்றியமையாதது. மீன் நல்ல புரதம் கொண்ட உணவாக இருக்கின்ற நிலையிலே, அந்த* GIF Tilapia *என்று சொல்லக்கூடிய அந்த வகை* Tilapia *மீன் கடலில் வளருவது இல்லை. அது உள்நாட்டு மீன்.* Fresh water fish. Fresh water-*ல், நன்னீரிலே வளரக்கூடிய மீன் அந்த* GIF Tilapia. *நம்முடைய இளைஞர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்திலே சுமார் 60 இலட்சம் பேர் பதிவு செய்து வேலைக்குக் காத்திருக்கிறார்கள். எல்லோருக்கும்*

[திரு. டி. ஜெயக்குமார்] [2018 ஜூன் 6

வேலை தரவேண்டியது அரசாங்கத்தினுடைய பொறுப்பு. என்றாலும்கூட, சுய வேலைவாய்ப்பை உருவாக்கி, கிராமப்புறப் பொருளாதாரத்தை மேற்படுத்த வேண்டுமென்று சொன்னால், இதுபோன்ற technologies-ஐ நாம் முழுமையான அளவிற்குப் பயன்படுத்தவேண்டும். நாம், இதுபோன்ற வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கும் அந்த technology-ஐ கொண்டுபோய்ச் சேர்ப்பதற்கு வசதியாக இப்போது 6 கோடி ரூபாய் செலவிலே வனத் துறை அமைச்சருடைய மாவட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அதற்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-40

***மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரத்தின் வழி நடந்து, வெற்றிச் செயல் புரிந்து, தீரத்தின் சின்னமாய்த் திகழும் தியாகத்தாய்; ஏழை மக்கள் வாழ்வுக்கே தன் இன்னுயிரை ஈந்த தெய்வத்தாய்; இமயத்தின் உயரத்திற்கு இயக்கத்தை வளர்த்து, மக்கள் இதயத்தில் நிலைபெற்ற ஆட்சியைச் செலுத்தி, மறைந்தாலும் மறையாமல் மக்கள் மனங்களில் கொலுவிருக்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டதைப்போல, 2011 முதல் 2017 ஆம் ஆண்டு வரை 273 கோடி ரூபாய் செலவில் 75,448 பயனாளிகளுக்கு கறவைப் பசுக்களையும், 1,128 கோடி ரூபாய் செலவில் 8,72,152 பயனாளிகளுக்கு வெள்ளாடுகளையும் வழங்கி மாண்புமிகு அம்மா அவர்கள் சாதனை படைத்தார்கள் என்பதை இந்த அவையிலே பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், கடந்த மாதம் புதுடெல்லியில் நடைபெற்ற வேளாண்மைத் துறை மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்களின் கருத்தரங்கில் இத்திட்டம் குறித்து எடுத்துரைத்தபோது, மாண்புமிகு மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. ராதா மோகன் சிங் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்கும், இதைச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும் நன்றியையும், வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்தார்கள் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

2018 ஜூன் 6] [திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்]

(மேசையைத் தட்டும் ஒலி) இதைப்போலவே, பல சாதனைகள் படைத்ததால்தான் இந்திய துணைக் கண்டத்திலேயே சாதனைகளுக்காக வெற்றிபெற்ற ஒரே அரசு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில், ஓராண்டில் நூறாண்டு சாதனை படைத்து, ஏழைகளின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக மாநிலத்தின் 31 மாவட்டங்களிலுள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் தலா 100 பயனாளிகள் வீதம், பயனாளி ஒருவருக்கு நாட்டின கோழிக் குஞ்சுகள் 50 வீதம் 25 கோடி ரூபாயில் 38,500 பெண் பயனாளிகளுக்கு கோழிகள் வழங்கப்படும் என்ற முத்தான அறிவிப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். மேலும், 5 அறிவிப்புகளை வழங்கி, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் அயராது உழைக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் கால்நடை பராமரிப்புத் துறைக்கு சீரிய திட்டங்களைத் தந்து, சிறப்பு சேர்த்துள்ளார்கள். இப்படி பல்வேறு திட்டங்களைக் கொடுத்திருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன், மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கில், 350 கோடி ரூபாய் மதிப்பிலான 6 புதிய திட்டங்களை பால் வளத் துறைக்கு விதி 110-ன்கீழ் அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் அயராது உழைக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு எனது துறையின் சார்பிலும், எனது சார்பிலும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் கால்நடை பராமரிப்பு சம்பந்தப்பட்ட அறிவிப்புகளை திண்டுக்கல் மாவட்டத்திற்கும், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, எங்கள் மாவட்டத்தின் பாலாறு-புரந்தலாறு அணைப் பகுதியில் GIF Tilapia மீன் தொழில் முனைவோர் பூங்கா அறிவித்தமைக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் திண்டுக்கல் மாவட்டத்திற்கு கடல் எப்போது வந்தது என்று கேட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தது பாலாறு-புரந்தலாறு அணை பகுதிக்குத்தான். (குறுக்கீடு) அவர் சொன்னதைப்பற்றி அவரிடம் கேளுங்கள். இந்த அறிவிப்பு பாலாறு-புரந்தலாறு அணை பற்றியதுதான். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், என்னவென்று சொல்லுங்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களோ அல்லது மாண்புமிகு அமைச்சர்களோ விதி 110-ன்கீழ் அறிக்கை வெளியிடுவதில் தவறில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அப்படி அறிவிக்கிறார்கள். பொதுவாக, நான் இந்த அவையிலே கற்றுக்கொண்டது, யார் யார் எந்தெந்த இலாகாவோ, அவர்கள் இலாகா குறித்து பதில் சொல்கிறபோதுதான் இந்தச் சலுகைகளையெல்லாம் சொல்வார்கள். சொல்லக்கூடிய ஆற்றல் படைத்தவர்கள்தான் அவர்கள். ஆனால், நமது மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களோ, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களோ நேற்றே இந்த அறிவிப்புகளை அறிவித்திருக்க முடியும். ஆனால், எல்லாவற்றையும் தொகுத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு அறிவித்திருக்கிறார்கள். அதைக்கூட நான் வரவேற்கிறேன். அதிலொன்றும் சந்தேகம் இல்லை. மாண்புமிகு முதலமைச்சராக இருக்கிறவருக்கு எல்லாவற்றையும் சொல்லக்கூடிய அதிகாரம்

இருக்கிறது, சொல்கிறார்கள். ஆனால், அவர் அறிவித்துவிட்ட பிறகு, மறுபடி ஒவ்வொரு அமைச்சராக எழுந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னதையே சொல்லி, active voice-*ல் சொன்னதை* passive voice-*ல் சொல்லி, இவ்வாறு நேரத்தை* consume *செய்வது நியாயம்தானா என்று கேட்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னால், சொன்னதுதான். அதை ஏற்றுக்கொள்கிறோம். அதற்குப் பிறகும், ஒவ்வொருவராக எழுந்து நன்றி தெரிவிக்கிறேன், நன்றி தெரிவிக்கிறேன் என்று சொல்லி, எவ்வளவு நேரம் ஆகின்றது என்று பாருங்கள்.* (குறுக்கீடு) *இதைக் குறைக்கலாம் என்றுதான் சொல்கிறேன்.*

முற்பகல் 11-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, துறையினுடைய அமைச்சர்கள். . .* (குறுக்கீடு) *இல்லை, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உட்காருங்கள். நான் சொல்கிறேன், உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் துறைக்கு அறிவிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிவிப்புகளுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் நன்றி சொல்கிறார்கள்.* (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: *நன்றி சொல்லட்டும், தங்களுடைய துறைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இவ்வளவு கோடி நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். எனவே, நன்றி இருக்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, அதை பார்த்துக்கொள்ளலாம்.*

4. விழுப்புரம் மாவட்டம், பெரவளூர் கிராமம், நீட் தேர்வில் தோல்வியடைந்ததால் உயிரிழந்த மாணவி பிரதிபா குடும்பத்திற்கு நிவாரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் வட்டம், பெரவளூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சண்முகம் என்பவரின் மகள் செல்வி பிரதிபா என்பவர் 'நீட்' தேர்வில் குறைவான மதிப்பெண் எடுத்ததன் காரணமாக,*